RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை மலர்-4 இதழ்-1 01 ஜனவரி புதன்கிழமை malaithanthi2020@gmail.com 4 பக்கங்கள் விலை ரூ. 5

## குவைத்தில் திமுக அயலக அணி சார்பில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மூன்று ஆண்டுகள் சாதனை விளக்க மாநாடு

தாம்பரம் ஜன.1

செங்கல்பட்டு மாவட்டம் குவைத்தில் உள்ள திமுக அயலக அணி சார்பில் வருகின்ற 03.01.2025 வெள்ளிக்கிழமை மாலை 5 மணி அளவில் குவைத் தளபதி பேரவை நடத்தும் புளம் பெயர்ந்த தமிழர்களின் நலன் காக்கும் திராவிட மாடல் ஆட்சியில் தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் மூன்றாண்டுகள் சாதனை விளக்க மாநாடு குவைத் தர்மா டீச்சர் சொசைட்டியில் நடைபெற உள்ளது இம்மாநாட்டில் தலைமை கழகத்தின் சார்பில் கழக அமைப்புச் செயலாளர் ஆர் எஸ் பாரதி தாம்பரம் மாநகராட்சி துணை மேயர் கோ. காமராஜ் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்ற உள்ளனர் மாநாட்டில் குவைத் வாழ் அரசியல் கட்சி நிர்வாகிகள் தமிழ் அமைப்புகளின் பிரதிநிதிகள் சமூக ஆர்வலர்கள் குவைத் வாழ் தமிழ் பெருங்குடி மக்கள் கலந்து கொள்ள உள்ளனர் இம் மாநாட்டு ஏற்பாட்டினை குவை. அலாக. அணி தளபதி பேரவை அமைப்புச் செயலாளர் மேட்டுப்பட்டி ராஜன் முகமது தலைமையில் கவிஞர் அல் சாதிக் பாச்சா கவிஞர் விட்டு கட்டி மஸ்தான் கவிஞர் சம்சுதீன் கிளாட்வின் பாக்கியராஜ் காளிதாசன் சரவணன் ராஜி நாசர்





முகமது பாண்டி ஜாகிர் உசேன் எதுமலை பாவாசா சேஃப்டி குமார் சாமி மங்கலேஸ்வரன் மற்றும் நிர்வாகிகள் முன் நின்று நடத்துகின்றனர்.

சிவகங்கை மாவட்டம் இளையான்குடி சுற்று பகுதிகளில் உள்ள விவசாயத்தை காட்டு விலங்குகளான காட்டுப்பன்றி, காட்டு மாடுகள், மான்கள் போன்ற விலங்குகளால் விளைந்து அறுவடைக்கு தயாராக உள்ள நிலையில் உள்ள நெற்பயிர்களை அழித்து சேதப்படுத்தி வருகிறது. மாவட்ட ஆட்சியரிடம் விவசாய சங்கம் சார்பாக பலமுறை முறையிட்டும் மாவட்ட நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை.

இரு தினங்களுக்கு முன்பாக இளையான்குடி வட்டம் கீழாயூர் வருவாய்கிராமம் கரைக்குடி கிராமத்தைச் சேர்ந்த பூமிநாதன் என்பவருடைய நெற்பயிர்கள் முற்றிலும் காட்டு மாடுகளால் அழிக்கப்பட்டுள்ளது. விதை, உளவு, விதை நெல், களை எடுத்தல், உரம் போட்டல், பூச்சி மருந்து தெளித்தல் இது போன்ற பல செலவுகள் செய்தும் அறுவடைக்கு தயாராக உள்ள நிலையில் நெற் பயிர் முழுவதும் அழிக்கப்பட்டுள்ளது. இதனால் கடன் வாங்கி விவசாயம் செய்து இருந்தும் காட்டு மாடுகளால் அழிக்கப்பட்டுள்ளது. இளையான்குடி சுற்று பகுதிகளை வனத்துறை வேளாண்மை துறை வருவாய்த்துறை உள்ளிட்ட துறையினர் ஆய்வு செய்து உரிய இழப்பீடு பெற்று விவசாயிகளை காப்பாற்றுமாறு இப்பகுதி விவசாயிகள் கேட்டுக் கொள்கின்றனர்.



செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி 1வது மண்டலத்தில் மாமன்ற கூட்டம் 1வது மண்டலம் குழுத் தலைவர் பம்மல் தெற்கு பகுதி கழக செயலாளர் வே.கருணாநிதி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் உதவி ஆணையாளர் சொர்ணலதா, மாநகராட்சி உதவி செயற் பொறியாளர் சத்தியசீலன், மாமன்ற உறுப்பினர்கள் இரா.நரேஷ்கண்ணா, ஆ.மதினாபேகம், ஜெ.சண்முக சுந்தரி, கலைவாணி பிரபு, வாணிஸ்ரீ விஜயகுமார், சித்ரா தமிழ்குமரன், கல்யாணி டில்லி, மு.இன்பசேகர், ரம்யா சத்தியபிரபு, சத்யா மதியழகன், சித்ராதேவி முரளிதரன், மண்டல கண்காணிப்பாளர், பொதுப்பணி மேற்பார்வையாளர்கள், சுகாதார அலுவலர் மற்றும் மண்டல பணியாளர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்..

## நாட்டில் சமூக நல்லிணக்கம் செழிக்கட்டும் முதல்வர் ஸ்டாலின் புத்தாண்டு வாழ்த்து

சென்னை, ஜன.1

"புத்தாண்டாகிய 2025ல் உலகெங்கும் அமைதி திரும்பட்டும். நம் நாட்டில் சமூக நல்லிணக்கம் தழைத்துச் செழித்தோங்கட்டும். இல்லந்தோறும் அன்பும் மகிழ்ச்சியும் நிறைந்திருக்கட்டும்! தமிழ்நாடு அதற்கு வழிகாட்டும்! அனைவருக்கும் எனது உளம் நிறைந்த ஆங்கிலப் புத்தாண்டு நல்வாழ்த்துகள்." என தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் தனது வாழ்த்தினை தெரிவித்துள்ளார்.



இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், "இந்திய ஜனநாயகத்தின் மீதான நம்பிக்கையை மீட்ட 2024 நிறைவுற்று, புத்தாண்டு 2025 பிறக்கிறது.

தமிழ்ப் புதல்வன், ஊரகப் பகுதிகளில் மக்களுடன் முதல்வர், நீங்கள் நலமா, கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் திட்டம், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் விரிவாக்கம், அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவிகளுக்கும் புதுமைப் பெண் திட்டம் விரிவாக்கம், கலைஞர் கைவினைத் திட்டம், 'ஊட்டச்சத்தை உறுதி செய்' திட்டத்தின் இரண்டாம் கட்டம், இரண்டு கோடிப் பயனாளிகளைக் கடந்த மக்களைத் தேடி மருத்துவம், 500 கோடிக்கும் அதிகமான கட்டணமில்லாப் பயணங்கள் செய்யப்பட்டுள்ள விடியல் பயணம் திட்டம், இந்திய அளவில் பாராட்டுகளைப் பெற்று வரும் 'நான் முதல்வன்' திட்டம், மகளிரின் பொருளாதாரத் தன்னிறைவை நோக்கிய கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் 1.48 லட்சம் பேருக்கு கூடுதலாக விரிவாக்கம், அத்திக்கடவு அவிநாசி திட்டம் என 2024ம் ஆண்டு தமிழ்நாட்டில் நமது திராவிட மாடல் அரசின் தொடர் சாதனைப் பயணம் புதிய பாய்ச்சல்களை நிகழ்த்திக் காட்டியுள் ளது.

இந்தச் சாதனைகளை உச்சிமுகர்ந்து அங்கீகரிக்கிறோம் எனக் கூறும் விதமாகத் தான் 2024 நாடாளுமன்றத் தேர்தலில் 'நாற்பதுக்கு நாற்பது' என இந்தியாவே திரும்பிப் பார்க்கும் வெற்றி மகுடம் சூட்டினர் நம் மக்கள். தமிழ்நாடும், புதுச்சேரியும் அளித்த அந்த மாபெரும் வெற்றிதான் இந்தியாவில் மதச்சார்பின்மைக் கான குரல் இன்னும் உயிர்ப்போடு ஒலித்துக் கொண்டிருக்க, தொடர்ந்து நிலைத்து நிற்க மிக முக்கியக் காரணமாக அமைந்துள்ளது.

அந்த வகையில் விடுதலை இந்திய வரலாற்றில் ஜனநாயகத்தை பாதுகாத்து, இந்நாட்டின் பெருமையை நிலைநாட்ட, தமிழ்நாடு மக்கள் அளித்த வெற்றிக்குரிய 2024ஆம் ஆண்டு மறக்க முடியாத ஆண்டாக அமைந்து விட்டது. சோதனைகள், தடங்கல்களைக் கடந்து சாதனைகள் படைக்கவும், வெற்றி பெறவுமான நம்பிக்கையினையும் உத்வேகத்தினையும் அளித்தது 2024ம் ஆண்டு!

புத்தாண்டாகிய 2025ல் உலகெங்கும் அமைதி திரும்பட்டும். நம் நாட்டில் சமூக நல்லிணக்கம் தழைத்துச் செழித்தோங்கட்டும். இல்லந்தோறும் அன்பும் மகிழ்ச்சியும் நிறைந்திருக்கட்டும்! தமிழ்நாடு அதற்கு வழிகாட்டும்! அனைவருக்கும் எனது உளம் நிறைந்த ஆங்கிலப் புத்தாண்டு நல்வாழ்த்துகள்!" என தெரிவித்துள்ளார்.


## தமிழகத்தில் ஸ்மார்ட் மின் மீட்டர் கொள்முதல்... அதானி நிறுவன டெண்டர் ரத்து

சென்னை, ஜன.1

தமிழகத்தில் உள்ள சுமார் 3 கோடி மின் நுகர்வோர்களின் மின்சார பயன்பாட்டை மேம்படுத்தும் நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. அதன்படி, ஸ்மார்ட் மின் மீட்டர்கள் பொருத்துவதற்கு திட்டமிடப்பட்டது. இதற்காக மத்திய அரசு உடன் இணைந்து 19, 000 கோடி ரூபாய் மதிப்பில் ஸ்மார்ட் மின் மீட்டர்கள் திட்டத்தை செயல்படுத்த உள்ளனர். இதன்மூலம் வீடுகளில் பயன்படுத்தப்படும் மின்சாரத்தின் அளவை மிகவும் துல்லியமாக கணக்கிட முடியும் என்கின்றனர்.

குறிப்பாக வீடு தேடி மின் வாரிய ஊழியர்கள் வரும் நிலை முடிவுக்கு வரும். மின் வாரிய அலுவலகத்தில் இருந்த படியே நுகர்வோர்களின் மின்சார பயன்பாட்டை ஸ்மார்ட் மீட்டர்கள்



கணக்கிட்டு சம்பந்தப்பட்ட நபர் களுக்கு எஸ்.எம்.எஸ் அல்லது இமெயில் மூலம் தகவல் தெரிவிக்க முடியும். இதற்கான டெண்டர் விடும் பணிகள் பல ஆண்டுகளாக நடைபெற்று வருகின்றன.

ஆனால் பல்வேறு காரணங்களால் டெண்டர் ரத்து செய்யப்பட்டு வருகிறது. முன்னதாக 8 மாவட்டங்களுக்கு மட்டும் 82 லட்சம் ஸ்மார்ட் மீட்டர்கள் வாங்க தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் டெண்டர் விடப்பட்டிருந்தது. இதில் அதானி நிறுவனமும் பங்கேற்றது. இது குறைந்த கட்டணமே குறிப்பிட்டிருந்தாலும், அந்த கட்டணம் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் பட்ஜெட்டை காட்டிலும் அதிகமாக இருந்ததாக சொல்லப்படுகிறது.

இதனால் அதானி நிறுவனத்துடனான ஸ்மார்ட் மின் மீட்டர் டெண்டரை தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் ரத்து செய்துள்ளது. மொத்தம் மூன்று நிறுவனங்கள் பங்கேற்ற நிலையில் இவை அனைத்துமே அதிக தொகைக்கு டெண்டர் கேட்டிருந்தது கவனிக்கத்தக்கது. இந்த சூழலில் அதானி நிறுவனத்துடன் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்தப்பட வாய்ப்புள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதானி நிறுவனம் தரப்பிலும் இந்த டெண்டரை எப்படியாவது இறுதி செய்ய மும்முரம் காட்டி வருகின்றனர். அடுத்தடுத்து டெண்டர் ரத்து செய்யப்பட்டு வரும் நிலையில், தமிழக மக்கள் பெரிதும் ஏமாற்றத்திற்கு ஆளாகியுள்ளனர். இந்நிலையில் வீடுகளில் ஸ்மார்ட் மின் மீட்டர்கள் பொருத்தும் பணிகள் மேலும் தாமதமாகும் எனக் கூறப்படுகிறது.

## ஆங்கிலப் புத்தாண்டு: அனைத்துக்கட்சித் தலைவர்கள் வாழ்த்து

சென்னை, ஜன.1

2025 ஆங்கிலப் புத்தாண்டு கொண்டாட்டத்தை முன்னிட்டு பாமக நிறுவனர் ராமதாஸ், ஓபிஎஸ் உள்ளிட்ட தலைவர்கள் வாழ்த்துகளை தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பாக அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கைகளில் கூறியிருப்பதாவது: ராமதாஸ்: மாற்றத்திற்கும், மகிழ்ச்சிக்கும் வழிவகுக்கக் கூடிய 2025ஆம் ஆண்டை வரவேற்று கொண்டாடும் தமிழ்நாட்டு மக்கள் அனைவருக்கும் இனிய ஆங்கில புத்தாண்டு நல்வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒவ்வொரு புத்தாண்டும் எல்லையில்லாத நம்பிக்கைகளுடன் தான் பிறக்கின்றன... ஆனால், அந்த ஆண்டின் நிறைவு சோதனைகளுடன் தான் முடிகிறது. நம்பிக்கை தான் வாழ்க்கை. கடந்த சில ஆண்டுகளின் துயரங்கள் அனைத்தும் துடைத்தெறியப்படும்; அனைத்து துறைகளிலும் இதுவரை இல்லாத முன்னேற்றங்கள் எட்டப்படும் என்ற நம்பிக்கையுடன் புதிய ஆண்டை வரவேற்போம். புத்தாண்டு நமக்கு மகிழ்ச்சியை, மட்டற்ற மகிழ்ச்சியை மட்டுமே அளிக்கும்; ஏமாற்றங்களை முழுமையாக விரட்டியடிக்கும்.

2025ஆம் ஆண்டு எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும் என்பதை இரு குறள்களின் வாயிலாக விளக்க விரும்புகிறேன். திருக் குறளின் 551ஆம் குறள், ''கொலைமேற்கொண் டாரிற் கொடிதே அலைமேற்கொண்டு அல்லவை செய்தொழுகும் வேந்து'' என்பதாகும். கொடுங்கோன்மை என்ற அதிகாரத்தில் வரும் இந்தக் குறளுக்கு கலைஞர் எழுதிய உரை, ''அறவழி மீறிக் குடிமக்களைத் துன்புறுத்தும் அரசு, கொலையைத் தொழிலாகக் கொண்டவரைவிடக் கொடியதாகும்'' என்பதாகும். தமிழ்நாட்டில் இப்போது நிலவும் கொலைத் தொழில் ஆட்சி அகற்றப்படுவதற்கு 2025ஆம் ஆண்டு வலிமையான அடித்தளம் அமைக்க வேண்டும்.

2026ஆம் ஆண்டு ''வானோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன் கோனோக்கி வாழுங் குடி''(குறள்:542. பொருள்: உயிர்கள் எல்லாம் மழையை எதிர்பார்த்தே வாழும்; மக்களோ மன்னரின் நேர்மையான ஆட்சியை எதிர்பார்த்தே வாழ்வர்) என்ற செங்கோன்மை அதிகாரத்தின் குறளைப் போன்ற ஆட்சி அமைய வேண்டும்.

நாம் எதிர்பார்ப்பது நிச்சயம் நடக்கும். 2025 ஆம் ஆண்டு நாம் எதிர்பார்த்ததைப் போலவே இனிப்பாக அமையும்.... அனைவருக்கும் அனைத்து நலன்களும், வளங்களும் கிடைக்கும்; பொருளாதாரம் வளரும்; மகிழ்ச்சி பெருகும்; அமைதியும், நிம்மதியும் கிடைக்கும்; அவற்றை சாதிக்க நாம் கடுமையாக உழைப்போம் என்று கூறி தமிழக மக்களுக்கு மீண்டும் ஒருமுறை



புத்தாண்டு வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புமணி ராமதாஸ்: சோர்ந்து கிடப்பவர்களுக்கு நம்பிக்கையையும், உறுதியையும் வழங்கும் ஆங்கிலப் புத்தாண்டு பிறப்பை கொண்டாடும் சொந்தங்கள் அனைவருக்கும் இதயங்கனிந்த வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன். புத்தாண்டு பிறப்பு என்பது ஆண்டுக்கு ஒரு முறை வழக்கமாக வந்து போகும் நிகழ்வல்ல. ஒவ்வொரு ஆண்டும் மனிதகுலத்தின் மனதில் புத்து ணர்வையும், புது நம்பிக்கையையும் விதைப்பதற்கான உன்னத திருநாள் ஆங்கிலப் புத்தாண்டு ஆகும்.

ஓராண்டில் ஆயிரமாயிரம் ஏமாற்றங்கள், வருத்தங்கள், கவலைகள் இருந்தாலும், அவை அனைத்தையும் நாட்காட்டியுடன் சேர்த்து ஒதுக்கி வைத்து விட்டு, புதிதாக பிறக்கப் போகும் ஆண்டில் எத்தனை சவால்கள் வந்தாலும் அவற்றை துணிச்சலுடன் எதிர்த்து நின்று வீழ்த்தும் நம்பிக்கையையும், உத்வேகத்தையும் நமக்கு அளிப்பது புத்தாண்டு தான். அதை எவரும் மறுக்க முடியாது.

தமிழ்நாட்டு மக்களுக்கு 2024 ஆம் ஆண்டு பெரும் துயரமாக அமைந்தது. மழை, வெள்ளம், சட்டம் - ஒழுங்கு சீர்குலைவு, அடக்குமுறை என அனைத்து பாதிப்புகளாலும் தமிழ்நாட்டு மக்கள் பாதிக்கப்பட்ட நிலையில், அவற்றை சரி செய்ய வேண்டிய தமிழக அரசு, தனக்குத் தானே புகழ் மாலைச் சூடிக்கொண்டு மக்களைக் காக்காமல் துன்பப்படுத்தியதை கடந்த ஓராண்டாக நாம் கண்டோம். இதற்கு முடிவுரை எழுதி மக்கள் மகிழ்ச்சிக்கு வரவேற்புரை வழங்கும் ஆண்டாக 2025 ஆம் ஆண்டு அமைய வேண்டும்.

தமிழ்நாட்டின் நலன்கள், உரிமைகள் ஆகியவற்றின் மீது படிந்த இருள் விலகி, ஒளி பிறக்க ஆங்கிலப் புத்தாண்டு வகை செய்யட்டும். புத்தாண்டில் தமிழ்நாட்டு மக்களுக்கு அனைத்து நலன்களும், வளங்களும், மகிழ்ச்சி, வளர்ச்சி, அமைதி, மனநிறைவு, நல்லிணக்கம், சகோதரத்துவம் உள்ளிட்ட அனைத்தும் கிடைக்க வேண்டும் என்று கூறி, மீண்டும் ஒருமுறை ஆங்கிலப் புத்தாண்டு நல்வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஓபிஎஸ்: மலரும் ஆங்கிலப் புத்தாண்டை மலர்ச்சியுடனும், மகிழ்ச்சியுடனும் கொண்டாடும் இந்த இனிய நாளில், தமிழக மக்கள் அனைவருக்கும் எனது ஆங்கிலப் புத்தாண்டு நல்வாழ்த்துகளை மன மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

வன்முறை, பாலியல் பலாத்காரம், கொலை, கொள்ளை, கள்ளச் சாராயம், போதைப் பொருட்கள் நடமாட்டம் ஆகியவை ஒழிக்கப்பட்டு, அமைதி, வளம் வளர்ச்சி என்ற பாதையில் தமிழ்நாட்டைச் அழைத்துச் சென்று, தமிழ்நாடு இந்தியாவிற்கே முன்மாதிரியாக விளங்கிட வேண்டும் என்ற லட்சியத்தை அடைய நாம் அனைவரும் பாடுபட வேண்டும். அப்பொழுதுதான், அமைதியான சூழலில் வளமான வாழ்வு பெற்று அனைத்து மக்களும் முன்னேற்றம் காண முடியும்.

வருகின்ற புத்தாண்டு அனைத்து மக்களின் வாழ்க்கையை வளமாக்கும் ஆண்டாக, துன்பங்கள் கரைந்து இன்பங்கள் நிறையும் ஆண்டாக, தோல்விகள் தேய்ந்து வெற்றிகள் பெருகும் ஆண்டாக, தடைகளைத் தகர்த்தெறியும் ஆண்டாக, கனவுகள் நனவாகும் ஆண்டாக எல்லையில்லா மகிழ்ச்சியை தரும் ஆண்டாக, மாற்றத்தினை உருவாக்கும் ஆண்டாக மலரட்டும் என்ற என்னுடைய அவாவினைத் தெரிவித்து, அனைவருக்கும் என்னுடைய புத்தாண்டு நல் வாழ்த்துகளை மீண்டும் ஒரு முறை தெரிவித்துக் கொள்கிறேன்

கே.பாலகிருஷ்ணன் வாழ்த்து: பொருளாதார ஏற்றத்தாழ்வுகளும், சமூக பாரபட்சங்களும் இல்லாத ஒரு புதிய சமத்துவ சமூகம் மலர்வதற்கான ஓர் புதிய பாதையை அமைக்கவும் அதற்கு எதிரான அனைத்து தடைகளை தகர்க்கவும் நாம் அனைவரும் ஒன்றிணைந்து இந்த புத்தாண்டில் சபதம் ஏற்போம். இருள் போல சூழும் சாதிய, மத மோதல்கள், பிற்போக்குத்தனமான பாலின பாகுபாடு, மூடநம்பிக்கைகள், சீரழியும் முதலாளித்துவத்தின் வெளிப்பாடான ஊழல் மற்றும் பெரும் கொள்ளை உள்ளிட்ட அனைத்து கேடுகளிலிருந்தும் சமூகத்தை விடுவித்து, மானுடம் போற்றும் உயர்வானதொரு சமூகத்தை கட்டி எழுப்புவதற்கான சமரசமற்ற போராட்டங்களை அரசியல் சமூக பொருளாதார தளங்களில் நடத்திக் கொண்டிருக்கும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) இத்தகைய முயற்சிகளை புத்தாண்டிலும் வரும் காலங்களிலும் மேலும் முனைப்போடு தொடரும்.

கார்ப்பரேட் இந்துத்துவா கொள்கைகளை அமலாக்கி, மக்களைப் பிரிக்கும் பிளவுவாத அரசியலையும், கூட்டாட்சி மற்றும் மதச்சார்பின்மை உள்ளிட்ட விழுமியங்களை சிதைக்கும் ஏதேச்சாதிகார ஆட்சியையும் தோற்கடித்து நமது நாட்டின் பன்மைத்துவத்தை பாதுகாக்கும் போராட்டத்தை வலுப்படுத்துவோம் எனும் அறைகூவலை முன்வைப்பதோடு, அத்தகைய போராட்டத்தில் இணைந்திருக்கும் தொழிலாளர்கள், உழைப்பாளி மக்கள், விவசாயிகள், விவசாய தொழிலாளர்கள், முற்போக்காளர்கள், அறிவுத்துறையினர் உள்ளிட்ட அனைத்து தரப்பு மக்களுக்கும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) தனது புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது.

செல்வப்பெருந்தகை: பிறக்கப்போகிற 2025 ஆங்கில புத்தாண்டில் இந்தியாவில் ஜனநாயகம் தழைக்கவும், மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்கிற வகையிலும், மக்களவை எதிர்கட்சித் தலைவர் திரு. ராகுல்காந்தி அவர்கள் எடுத்து வருகின்ற முயற்சிகள் வெற்றி பெற வேண்டுமென மக்கள் எதிர்பார்க்கிறார்கள். இதன்மூலம் மக்களின் வாழ்வு ஏற்றம் பெற்று, ஒளிமயமான எதிர்காலம் அமைய அனைவருக்கும் தமிழ்நாடு காங்கிரஸ் சார்பாக ஆங்கில புத்தாண்டு வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.



மங்கலம் சாலையில் குளத்துப்பாளையம் பகுதியில் சிறுபாலம் அமைக்கும் பணி தீவிரம் திருப்பூர் நெடுஞ்சாலை வடக்கு உட்கோட்டத்திற்குட்பட்ட மாநில நெடுஞ்சாலையான திருப்பூர் சோமனூர் சாலை கி.மீ.6/2 மற்றும் 6/4 பகுதியில்(குளத்துப்பாளையம் அருகில்) பொது மக்களின் நீண்டநாள் கோரிக்கைக்கிணங்க மேற்படி பகுதியில் போக்குவரத்து செறிவு அதிகமாக உள்ளதாலும் மழைக்காலங்களில் மழைநீர் மற்றும் கழிவுநீர் சாலையின் ஓடுதளத்தில் தேங்குவதால் மழைநீர் தேங்காவண்ணம் அப்பகுதியில் இரண்டு சிறுபாலங்கள் அமைக்கும் பணி துரித வேகத்தில் நடைபெற்று வருகிறது. மிக விரைவில் பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வருவதாக உதவிக்கோட்டப்பொறியாளர் விஜயகுமார், இளநிலைப்பொறியாளர் ராஜேஷ்தெரிவித்தனர்.



தூத்துக்குடி புதியம்புத்தூர் பகுதியைச் சேர்ந்த ஆத்திமுத்து என்பவரது மகன் தனசிங் சாலை விபத்தில் மூளைச்சாவு அடைந்தார் அவரது உடல் உறுப்புகளை தானம் அளிக்க அவரது குடும்பத்தினர் முன் வந்ததை தொடர்ந்து அவரது உடல் உறுப்புகள் தானம் அளிக்கப்பட்டு அன்னாரது உடலுக்கு அரசு மரியாதை செலுத்தும் விதமாக கடந்த (டிச30) சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை துறை அமைச்சர் கீதா ஜீவன் மாவட்ட ஆட்சித்தலைவர் இளம் பகவத் ஆகியோர் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர்

## சிவகங்கை மாவட்டத்தில் மருத்துவ கழிவுகளை வெளியேற்றும் நிறுவனங்கள் மீது உரிய நடவடிக்கை

சிவகங்கை, ஜன.1

சுற்றுச்சூழல் வனம் மற்றும் சூழல் மாறுபாடு அமைச்சகம், மருத்துவகழிவுகளை முறையாக சேகரித்து, பிரித்து, சுத்திகரித்து, அகற்றுவதற்காக மருத்துவ கழிவுகள் மேலாண்மை விதிகள், 2016ஐ அறிவிக்கை செய்துள்ளது. இவ்விதிகளை பின்பற்றுவதன் மூலம், மருத்துவ கழிவுகளின் உற்பத்தியையும் மற்றும் சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் தாக்கத்தையும் குறைத்திட இயலும்.



மேலும், மருத்துவமனைகள், இரத்த வங்கிகள், ஸ்கேன் சென்டர்கள், இரத்தப் பரிசோதனை நிலையங்கள் ஆகியவற்றில் இருந்து வெளிவரும் மருத்துவக்கழிவுகள் முறையற்ற வகையில் அப்புறப்படுத்துவதால், சுகாதார, சுற்றுச்சூழல் சீர்கேடு ஏற்படுகிறது. மருத்துவக் கழிவுகளை விஞ்ஞான ரீதியாக சுத்திகரித்து அப்புறப்படுத்தும் வழிகளை மருத்துவக்கழிவு மேலாண்மை விதியில் தெரிவிக்கபட்டுள்ளது.

எனவே, சிவகங்கை மாவட்டத்தில் மருத்துவ கழிவுகளை வெளியேற்றும் நிறுவனங்கள், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தால் அனுமதிக்கப்பட்டுள்ள பொது மருத்துவ கழிவு சுத்திகரிப்பு நிலையங்களிடம் மட்டுமே ஒப்படைக்க வேண்டும். மேலும், விதிகளை பின்பற்றாமல் மீறுபவர்கள் மீது சம்மந்தப்பட்ட நிறுவனங்களை மூடி அபராதம் விதிக்கப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் ஆஷா அஜித், தெரிவித்துள்ளார்.



மதுரை மாவட்டம் விடுதலைப் போராட்ட வீரர் தியாகி விஸ்வநாததாஸ் நினைவு நாள் மாவட்ட ஆட்சித்தலைவர் மா.சௌ.சங்கீதா, அன்னாரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இந்த நிகழ்வின்போது, வருவாய் கோட்டாட்சியர் (திருமங்கலம்) திரு.கண்ணன் அவர்கள், வட்டாட்சியர் திரு.மனேக்ஸ் குமார் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



திருப்பூர் மாநகராட்சி மண்டலம்3 வார்டு60 முத்தம் பாளையம் பகுதியில் மக்களுடன் மேயர் திட்டத்தின் கீழ் பிள்ளையார் தெரு மாரியம்மன் கோவில், கிருஷ்ணா நகர், பாலாஜி நகர், மெயின் ரோடு, குபேரன், பிள்ளையார் நகர், கோவில் வழி, அரசு காலணி, ரேணுகா நகர், புதுப்பாளையம் ஆகிய பகுதிகளில் உள்ள சாலைப் பணிகள், தெருவிளக்கு குடிநீர், மழைநீர் வடிகால் மாநகராட்சி துவக்கப்பள்ளியில் புதிதாக கட்டப்பட்ட வகுப்பறை தூய்மை பணிகள் ஆகியன குறித்து மாநகராட்சி மேயர் தினேஷ்குமார் ஆய்வு மேற்கொண்டு பொதுமக்களிடம் குறைகளை கேட்டறிந்தார்.உடன் தலைமை பொறியாளர் செல்வநாயகம், உதவி செயற்பொறியாளர் முனியாண்டி மாமன்ற உறுப்பினர்கள் மாநகராட்சி அலுவலர்கள் உட்பட்ட பலர் உள்ளனர்..

# இரட்டை இலை வழக்கு... உயர் நீதிமன்றத்தில் எடப்பாடி பழனிசாமி அளித்த பதில்!

சென்னை, ஜன.1

இரட்டை இலை யாருக்கு சொந்தம் என்பது குறித்த வழக்கில் தேர்தல் ஆணையம் பிறப்பித்த உத்தரவில், எடப்பாடி பழனிசாமி, ஓ.பன்னீர்செல்வம், மனுதாரர் சூரியமூர்த்தி ஆகியோர் நேரில் ஆஜராகி பதிலளிக்குமாறு நோட்டீஸ் பிறப்பிக்கப்பட்டது.

இந்நிலையில் எடப்பாடி பழனிசாமி சார்பில் முன்னாள் அமைச்சர் சி.வி.சண்முகம் கடந்த 23ஆம் தேதி ஆஜரானார். இரட்டை இலை சின்னம் தொடர்பாக சில விளக்கங்களை அளித்தார். அதிமுக அதிகாரப்பூர்வ தேர்தல் சின்னம் விவகாரத்தில் சூரியமூர்த்திக்கு



எந்த உரிமையும் இல்லை. அவர் அதிமுகவை சேர்ந்தவர் என்று சி.வி.சண்முகம் கூறினார்.

இதற்கிடையில் தேர்தல் ஆணையம் பிறப்பித்துள்ள உத்தரவில், வாதி, பிரதிவாதிகள் தங்கள் தரப்பு ஆட்சேபங்களை டிசம்பர் 30க்கும் தாக்கல் செய்ய வேண்டும் என்றும், அதில் ஆட்சேபங்கள் இருந்தால் வரும் ஜனவரி 13ஆம் தேதிக்குள் தெரிவிக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளது.

இந்த சூழலில் இரட்டை இலை வழக்கில் சென்னை உயர் நீதிமன்றத்தில் இன்று (டிசம்பர் 31) பதிலளித்துள்ள எடப்பாடி பழனிசாமி, அதிமுகவின் உட்கட்சி விவகாரங்களில் தேர்தல் ஆணையம் தலையிட முடியாது என்று குறிப்பிட்டுள்ளார். மேலும் பொதுக்குழு தொடர்பாக தொடரப்பட்ட வழக்கிலும் தீர்மானங்களை சென்னை உயர் நீதிமன்றம் அங்கீகரித்துள்ளது எனக் கூறியுள்ளார்.

இரட்டை இலை விவகாரம் தொடர்ந்து இழுபறியாக சென்று கொண்டிருக்கும் நிலையில், வரும் ஜனவரி 13ஆம் தேதி முக்கிய உத்தரவு பிறப்பித்து சர்ச்சை முடிவுக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதிமுகவில் அதிகாரமிக்க பொதுச் செயலாளர் பதவியை எடப்பாடி பழனிசாமி வகித்து வருகிறார். இவரது தலைமையில் 2026 சட்டப்பேரவை தேர்தலுக்கு தீவிரமாக தயாராகி வருகின்றனர். இந்த சூழலில் கட்சியின் பொதுக்குழு கூட்டம், தேர்தல் சின்னம் எனப் பல வழக்குகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. குறிப்பாக இரட்டை இலை சின்னத்தை முடக்கக் கோரி திண்டுக்கல்லை சேர்ந்த சூரியமூர்த்தி என்பவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார்.

# மாணவி வன்கொடுமை: “FIR வெளியே கசியக் காரணம்” தேசிய தகவல் மையத்தின் விளக்கமென்ன?

சென்னை, ஜன.1

அண்ணா பல்கலைக்கழக மாணவிக்குப் பாலியல் தொந்தரவு கொடுக்கப்பட்ட வழக்கின் எப்.ஐ.ஆர் இணையத்தில் வெளியானது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இந்த சம்பவத்திற்கு எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி, பா.ஜ.க மாநிலத் தலைவர் அண்ணாமலை உள்ளிட்ட பல அரசியல் கட்சித் தலைவர்கள் கடும் எதிர்ப்பை தெரிவித்திருந்தனர். எப்.ஐ.ஆர் கசிந்தது



குறித்து சென்னை உயர் நீதிமன்றம் தானாக முன்வந்து விசாரித்தது.

இதுகுறித்து விசாரிக்க மூன்று பெண் ஐ.பி.எஸ் கொண்ட சிறப்பு விசாரணைக் குழு ஒன்றை அமைத்துள்ளது உயர் நீதிமன்றம். மேலும், சம்பந்தப்பட்ட மாணவிக்கு நஷ்ட ஈடாக ரூ. 25 லட்சம் வழங்கவும் உத்தரவிட்டுள்ளது.

தற்போது, அண்ணா பல்கலைக்கழக மாணவி விவகாரத்தில் எப்.ஐ.ஆர் எப்படி வெளியானது என்பது குறித்து தேசிய தகவல் மையம் கூறியுள்ளது. “எப்.ஐ.ஆரை இந்திய தண்டனை சட்டத்திலிருந்து (IPC) பாரதிய நியாய சன்ஹிதாவிற்கு (BNS) இணையத்தில் மாற்றும் போது தொழில்நுட்ப கோளாறுகளால் அது கசிந்திருக்கலாம்“ என்று தெரிவித்துள்ளது. தேசிய தகவல் மையத்தின் மூத்த இயக்குநர் அருள் மொழி வர்மன், “மாநில குற்றப்பிரிவு ஆவணக்கூடத்தின் வழிகாட்டுதலின் படி, பி.என்.எஸ்.எஸ் 64, 67, 68, 70, 79 பிரிவுகளில் பதியப்படும் வழக்குகள் எப்.ஐ.ஆரை பொது மக்கள் பார்க்க முடிகிற பக்கத்தில் காட்டாது. ஆனால், இந்த சம்பவத்திற்குப் பின்பு, மாநில குற்றப் பிரிவு ஆவணக்கூடத்தின் எப்.ஐ.ஆர் பக்கத்தை ஒருமுறை சரிபார்க்கத் தேசிய தகவல் மையம் அறிவுறுத்தியுள்ளது” என்று கூறியுள்ளார்.

# ரேஷன் அரிசிக்கு மக்கள், 5 கிலோ மீட்டர் தூரம் நடக்கும் அவலநிலை, குடியாத்தம், கதிர்குளம் கிராம பொதுமக்களுக்கு ரேஷன் கடை திறக்க கோரிக்கை

வேலூர், ஜன.1

வேலூர் மாவட்டம், குடியாத்தம் தாலுகா, கல்லப்பாடி ஊராட்சி, கதிர்குளம் கிராமத்தில் சுமார் 350 க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றனர். இதில் சுமார் 175 குடும்பங்கள் ரேஷன் அட்டை வைத்துள்ளனர். இவர்களுக்கு பொது விநியோக திட்டத்தில் அரசால் வழங்கப்படும் ரேஷன் பொருட்களை வாங்க சுமார் ஐந்து கிலோ மீட்டர் தூரம் காட்டை கடந்து செல்லும் அவல நிலை உள்ளது.



இவர்கள் சுமார் 50 ஆண்டுகளாக இதுபோன்று மிகுந்த சிரமத்துடன் ரேஷன் பொருட்களை வாங்கி வருகின்ற னர். சுமார் 175 குடும்ப அட்டைதாரர்கள் ஊரிலிருந்து ரேஷன் கடைக்கு செல்ல 5 கிலோமீட்டர் தூரம் சென்று வருவதால் இடையில் காட்டுப்பகுதியில் யாணை, சிறுத்தை மற்றும் கரடி தொல்லையால் மக்கள் பீதியடைந்துள்ளனர். இது தொடர்பாக அப்பகுதி மக்களின் கோரிக்கைகளின் அடிப்படையில் கடந்த ஆகஸ்ட் 14ஆம் தேதி அரசு அதிகாரிகள், அலுவலர்கள் ஆய்வு மேற்கொண்டு உடனடியாக இந்த பொதுமக்களுக்கு ரேஷன் கடையை அமைத்து திறப்பதற்கும் ஆய்வுமேற்கொண்டனர். மேலும் இடத்தை தேர்வு செய்யப்பட்டு வாகனங்கள் வந்து திரும்புவதற்கான இடங்களையும் தயார் செய்த சாலை அமைத்து தாயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து சம்பந்தப்பட்ட துறை மாவட்ட அலுவலர் (டிஎஸ்ஓ) மற்றும் மாவட்ட ஆட்சியர் சுப்புலட்சுமி பொதுமக்கள் நலன் கருதி, யாணை சிறுத்தை மற்றும் கரடி நடமாட்டத்தால் பெரும் அவதிக்கு உள்ளாகியுள்ள பொதுமக்களுக்கு ஏதுவாக ரேஷன் கடையை திறந்து வைத்து பொதுமக்கள் பயனடையும் வகையில் வழிவகை செய்யுமாறு ஊராட்சி மன்ற தலைவர் மற்றும் பொதுமக்கள் வேலூர் மாவட்ட ஆட்சியர் சுப்புலட்சுமியிடம் பணிவான கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர்.

இது குறித்து மாவட்ட ஆட்சியர் உரிய நடவடிக்கை எடுத்து ஓரிரு நாட்களில் ரேஷன் கடையை திறந்து வைத்து யாணை, கரடி மற்றும் சிறுத்தை தொல்லைகளால் பீதியடைந்துள்ள பொது மக்களின் பயம் மற்றும உயிர் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டுமென ஊர்பொதுமக்கள், பொதுமக்கள் மற்றும் சமூக அலுவலர்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

# சிவகங்கை தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் நடத்தும் TNPSC Group-II & IIA தேர்வுகளுக்கு பயிற்சி

சிவகங்கை, ஜன.1

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் (தாட்கோ) முன்னெடுப்பாக, முன்னணி பயிற்சி நிறுவனம் மூலம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணக் கர்களுக்கு தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் நடத்தும் TNPSC Group-II & IIA தேர்விற்கான பயிற்சி வழங்கப்படவுள்ளது.



இப்பயிற்சியானது, தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் நடத்தும் TNPSC Group-II & IIA முதல் நிலை தேர்வில் (Preliminary exam) தேர்ச்சி பெற்று, முதன்மைத் தேர்வில் (Main) தேர்ச்சி பெற விரும்பும் மாணாக்கர்களுக்கு அளிக்கப்படவுள்ளது.

மேலும், இப்பயிற்சியினை பெற பட்டப்படிப்பில் தேர்ச்சி பெற்றவர்களாகவும், 21 முதல் 32 வயது நிரம்பிய ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இனத்தை சார்ந்தவர்களாக இருத்தல் வேண்டும். மேலும், விடுதியில் தங்கி படிக்க வசதியும், பயிற்சிக்கான செலவீன தொகை தாட்கோவால் மேற்கொள்ளப்படும்.

மேற்குறிப்பிட்டுள்ள திட்டத்தின் கீழ், பயன்பெற விருப்பமுள்ள நபர்கள் www.tahdco.com என்ற தாட்கோ இணைய தளத்தின் வாயிலாக பதிவு செய்து பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் ஆஷா அஜித், தெரிவித்துள்ளார்.

# சிவகங்கையில் கூட்டுறவுத் துறை அமைச்சர் பிறந்தநாளை முன்னிட்டு அன்னதானம்

சிவகங்கை ஜன.1

சிவகங்கை மாவட்டத்தில் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே ஆர் பெரிய கருப்பன் பிறந்தநாள் விழா வெகு விமர்சையாக கொண்டாடப்பட்டது

டாஸ்மாக் தொமுசா மாவட்ட செயலாளர் தலைமையில் இனிப்பு வழங்கியும் அன்னதான நிகழ்ச்சியும் மிக சிறப்பாக நடைபெற்றது சிவகங்கை டாஸ்மாக் குடோன் வளாகத்தில் அமைந்துள்ள விநாயகர் கோவிலுக்கு சிறப்பு அபிஷேக ஆராதனை மற்றும் சிறப்பு பூஜை நடைபெற்று அன்னதான நிகழ்ச்சியும் நடைபெற்றது இந்நிகழ்ச்சியில் டாஸ்மார்க் தொமுச மாவட்ட செயலாளர் கருப்புசாமி தலைமையில் மாவட்டத் தலைவர் ராஜ்மோகன் துணைத் தலைவர் சுப்பிரமணியன் மற்றும் துணை செயலாளர் சிவகுமார் கமலக்கண்ணன் பூமிநாதன் கருப்புசாமி கணேசன் கண்ணன் மாரிமுத்து சிவகுமார் தனபால் மற்றும் சங்க உறுப்பினர்கள் திரளாக கலந்து கொண்டனர் தொடர்ந்து



இதனைத் தொடர்ந்து அரசணி முத்துப்பட்டியில் உள்ள மன வளர்ச்சி குன்றியோர் பள்ளியில் அறுசுவை உணவும் இனிப்புகளும் வழங்கினர் மேலும் மாவட்டம் முழுவதும் பல்வேறு இடங்களில் திமுகவினர் கோவில்கள் மற்றும் முதியோர் இல்லங்களில் இனிப்பு வழங்கியும் அன்னதானம் வழங்கியும் அமைச்சர் பெரியகாருப்ப னின் பிறந்த நாள் விழாவை சிறப்பாக கொண் டாடினார்.



மதுரை ஜடாமுனி கோவில் தெருவில் என்.எல்.எஸ்.மஹாலில் கைத்தறித்துறையின் ஆங்கில புத்தாண்டு மற்றும் பொங்கல் திருநாளை முன்னிட்டு சிறப்பு கைத்தறி பட்டுச்சேலைகள் கண்காட்சியை மாவட்ட ஆட்சித்தலைவர் மா.செள.சங்கீதாகுத்துவிளக்கேற்றி முதல் விற்பனையை துவக்கி வைத்து பார்வையிட்டார். கைத்தறித்துறை துணை இயக்குநர் சங்கரேஸ்வரி, மதுரை சரக உதவி இயக்குநர் ரவிக்குமார்ஆகியோர் உடன் உள்ளனர்.



மதுரை மாவட்ட ஆட்சியர் முகம் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.மா.செள. சங்கீதா,அவர்கள், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சார்பில் ஹோட்டல் தமிழ்நாடு அலகு2ல் நடைபெறவுள்ள புத்தாண்டு கொண்டாட்டத்திற்கான கட்டண நுழைவுச் சீட்டு மாதிரியை வெளியிட்டார். தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சார்பில் மதுரை அழகர்கோயில் சாலையில் அமைந்துள்ள ஹோட்டல் தமிழ்நாடு அலகு2ல் புத்தாண்டு கொண்டாட்டம் 2025 கொண்டாப்பட உள்ளது. இந்த நிகழ்ச்சியில் ஆட்டம், பாட்டம், டி.ஜெ., விளையாட்டு போட்டிகள், பரிசுகள் உடன் 30க்கும் மேற்பட்ட சைவம் மற்றும் அசைவம் உணவுகள் பரிமாறப்பட உள்ளன. குழந்தைகள் விளையாட பல்வேறு போட்டிகளுடன் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதற்கான கட்டணச் நுழைவுச் சீட்டு பெறுவதற்கு தொலைபேசி எண்.9176995841, 6380699288 hoteltamilnadumadurai@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரி ஆகியவற்றின் மூலம் பெற்றுக் கொள்ளலாம் என மாவட்ட சுற்றுலா அலுவலகம் சார்பாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்வின் போது மாவட்ட சுற்றுலா அலுவலர் பாலமுருகன் அவர்கள், தமிழ்நாடு ஹோட்டல் மேலாளர் சதீஷ் உட்பட பலர் உடன் இருந்தனர்.

# சிவகங்கை மாவட்டம் மாவட்ட அளவிலான அறிஞர் அண்ணா மாரத்தான் ஓட்டப் போட்டி

சிவகங்கை, ஜன.1

அன்றாட வாழ்வில் உடற்தகுதியை பேணுவது குறித்து விழிப்புணர்வை பொதுமக்களிடையே ஏற்படுத்துவதற்கும், உடற்தகுதி கலாச்சாரத்தை இளைஞர்களிடையே புகுத்துவதற்கும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் பல்வேறு சிறப்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதனடிப்படையில், சிவகங்கை மாவட்டத்தில் அறிஞர் அண்ணா மாரத்தான் ஓட்டப் போட்டி வருகின்ற 05.01.2025 அன்று காலை 06.00 மணியளவில் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் தொடங்கி நடைபெறவுள்ளது.

இப்போட்டியில், 17 முதல் 25 வயதிற்குட்பட்டவர்கள் பிரிவில் மாணவர்களுக்கு 8 கி.மீ. தூரமும், மாணவியர்களுக்கு 5 கி.மீ. தூரமும், 25 வயதிற்கு மேற்பட்டவர்கள் பிரிவில் மாணவர்களுக்கு 10 கி.மீ. தூரமும், மாணவியர்களுக்கு 5 கி.மீ. தூரமும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மேலும், ஓட்டப்போட்டியில் பங்குபெறும் அனைவரும் கண்டிப்பாக தங்கள் உடற்தகுதி குறித்து சுய உறுதிமொழி படிவம் பூர்த்தி செய்து தரவேண்டும். 17 முதல் 25 வயதிற்குட்பட்ட மாணவ, மாணவிகள் தாங்கள் பயிலும் பள்ளி தலைமையாசிரியர் / கல்லூரி முதல்வர்களிடம் கண்டிப்பாக வயது சான்றிதழினை தனித்தனியாக பெற்று வரவேண்டும். ஆதார் கார்டு / பள்ளி, கல்லூரி அடையாள அட்டை கொண்டு வரவேண்டும். 25 வயதிற்கு மேற்பட்டவர்கள் தங்களது பிறப்புச்சான்றிதழ்/ஆதார் கார்டு நகல் கொண்டு வர



வேண்டும்.

இப்போட்டிகளில் வெற்றி பெற்று, முதல் மூன்று இடம் பெறுபவர்களுக்கு முதல்பரிசாக ரூ.5000/ மும், இரண்டாம் பரிசாக ரூ.3000/மும், மூன்றாம் பரிசாக ரூ.2000/ மும், 4 முதல் 10ம் வரை இடம் பெறுபவர்களுக்கு ரூ.1000/ மும் பரிசுத் தொகையினை அவர்களது வங்கி கணக்கின் வாயிலாக மட்டுமே வழங்கப்படும். எனவே, ஓட்டப் போட்டியில் பங்கேற்கும் அனைவரும் தங்கள் வங்கி சேமிப்பு கணக்கு புத்தகத்தின் முதல் பக்கம் நகலினையும் கண்டிப்பாக கொண்டு வரவேண்டும்.

மேலும், ஓட்டப்போட்டியில் கலந்து கொள்ளும் ஆண்கள் மற்றும் பெண்கள் அனைவரும் 05.01.2025 அன்று காலை 6.00 மணிக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாக வாயில் முன்பு வருகை தர வேண்டும். கூடுதல் விபரங்களுக்கு, மாவட்ட விளையாட்டு அலுவலர் அவர்களை 7401703503 என்ற அலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு விபரங்கள் பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் ஆஷா அஜித்,தெரிவித்துள்ளார்.

# சிவகங்கை கொல்லங்குடி வெட்டுடையார் காளி கோவிலில் தங்க தேர் பவனி விழா

சிவகங்கை ஜன01

சிவகங்கை மாவட்டம் கொல்லங்குடி ஸ்ரீ வெட்டுடையார் காளியம்மன் கோவிலில் கூட்டுறவுத்துறை அமைச்சர் பெரிய கருப்பன் பிறந்தநாளை முன்னிட்டு திமுக நிர்வாகிகள் தங்க தேர் இழுத்தும் சிறப்பு பூஜை நடத்தியும் வழிபட்டனர் அத்துடன் பக்தர்களுக்கு இனிப்பு மற்றும் அன்னதானமும் வழங்கினர் இந்நிகழ்ச்சியில் பேரூர் கழகச் செயலாளர் ஜெய ராமன் ஊராட்சி முன்னாள் தலைவர் தென்னரசு அறங் காவலர் கண்ணப்பன் மேப்பில் கோதண்டபாணி வழக்கறிஞர் திருப்பதி இளைஞரணி முத்தரசன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மற்றும் பொது மக்கள் திரளாக கலந்து கொண்டனர் இதனைத் தொடர்ந்து நாட்டரசன் கோட்டை கண்ணு டைய நாயகி அம்மன் கோவிலில் அமைச்சர் பெயரில் சிறப்பு அபிஷேகம் மற்றும் அர்ச்சனை



செய்து அங்குள்ள பக்தர் களுக்கும் இனிப்பு வழங்கியும் அன்னதானம் வழங்கியும் வழிபட்டனர்.

# குமரி முனையில் அய்யன் திருவள்ளுவர் சிலை வெள்ளி விழாவையொட்டி திருவள்ளுவர் சிலை - விவேகானந்தர் பாறையை இணைக்கும் கண்ணாடி இழைப் பாலத்தை திறந்து வைத்த முதல்வர் மு.க.ஸ்டாலின்





கன்னியாகுமரி, ஜன.1

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் கன்னியாகுமரியில், முக்கடல் சூழும் குமரி முனையில் அய்யன் திருவள்ளுவர் சிலை வெள்ளி விழாவில், 37 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள அய்யன் திருவள்ளுவர் சிலையை விவேகானந்தர் பாறையுடன் இணைக்கும் கண்ணாடி இழைப் பாலத்தை திறந்து வைத்தார். மேலும், திருக்குறள் நெறி பரப்பும் 22 தகைமையாளர்களுக்குச் சிறப்புப் பரிசுத் தொகையாக தலா 25 ஆயிரம் ரூபாய்க்கான காசோலை மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கி சிறப்பித்தார்.

திருக்குறள் எனும் அறிவுத் திருவிளக்கை, திக்கெட்டும் பரப்புகின்ற பணியை தன்னுடைய ஒப்பற்ற கடமையாக கருதி செயல்பட்ட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், குறளோவியம் தீட்டினார். குறளுக்கு விளக்கவுரை தந்தார், சென்னையில் வள்ளுவர் கோட்டம் அமைத்தார், அரசு அலுவலகங்களிலும், பேருந்துகளிலும் குறளை எழுதவைத்து, குறளை எளிய மக்களுக்கு கொண்டு சேர்த்தார்.

கடல் அலைகள் தாலாட்டும் குமரிக்கடல் நடுவே அய்யன் திருவள்ளுவருக்கு 2000ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் நாள் 133 அடியில் முத்தமிழறிஞர் கலைஞர் சிலை அமைத்தார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் கன்னியாகுமரியில் நிறுவப்பட்ட அய்யன் திருவள்ளுவர் சிலை வெள்ளி விழா காண்பதையொட்டி வரும் டிசம்பர் 30ஆம் தேதி முதல் ஜனவரி 1ஆம் தேதி வரை தமிழ்நாடு அரசின் சார்பில் பெருவிழா கொண்டாடப்படும் என்று -தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் 12.11.2024 அன்று அறிவித்தார்.

அந்த அறிவிப்பிற்கிணங்க, தமிழ்நாடு அரசின் சார்பில் முக்கடல் சூழும் குமரி முனையில் அய்யன் திருவள்ளுவர் சிலை வெள்ளி விழா 30.12.2024 முதல் 1.1.2025 வரை மூன்று நாட்கள் நடைபெறுகிறது. இவ்விழாவில், இன்றையதினம் (30.12.2024) அய்யன் திருவள்ளுவர் சிலையை விவேகானந்தர் பாறையுடன் இணைக்கும் கண்ணாடி இழைப் பாலம் திறப்பு விழா, திருக்குறள் நெறி பரப்பும் 22 தகைமையாளர்களுக்குச் சிறப்புப் பரிசுத் தொகை மற்றும் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்குதல், சொல்வேந்தர் திரு.சுகி.சிவம் தலைமையில் "திருக்குறளால் அதிக நன்மை தனிமனிதருக்கே -சமுதாயத்திற்கே" எனும் தலைப்பில் சிறப்புப் பட்டிமன்றம் ஆகியவை நடைபெற்றது.

நாளை (31.12.2024) அய்யன் திருவள்ளுவர் திருவுருவச் சிலை வெள்ளிவிழாச் சிறப்பு மலர் வெளியீடு, திருக்குறள் சார்ந்த போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்க்குப் பரிசுகள் வழங்குதல், பியானோ இசைக் கலைஞர் செல்வன் லிடியன் நாதஸ்வரம் அவர்களின் திருக்குறள் இசை நிகழ்ச்சி, அய்யன் திருவள்ளுவரின் பெருமைகளை எடுத்துரைக்கும் தமிழறிஞர்களின் கருத்தரங்கம் ஆகிய நிகழ்ச்சிகளும், 1.1.2025 அன்று திருக்குறள் ஓவியக் கண்காட்சி திறப்பு உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன.

அதன்படி, அய்யன் திருவள்ளுவர் திருவுருவச் சிலை வெள்ளி விழாவையொட்டி, தமிழ் நாடு முதலமைச்சர் இன்றைய தினம் படகு மூலம் அய்யன் திருவள்ளுவர் சிலை அமைந்துள்ள இடத்திற்கு சென்று, அய்யன் திருவள்ளுவர் திருவுருவச் சிலையின் கீழ் அமைக்கப்பட்டுள்ள "பேரறிவுச் சிலை" (Statue of Wisdom) அலங்கார வளைவினை திறந்து வைத்தார்.







அதனைத் தொடர்ந்து, அய்யன் திருவள்ளுவர் சிலையை விவேகானந்தர் பாறையுடன் இணைக்கும் கண்ணாடி இழைப் பாலத்தை திறந்து வைத்து, திருவள்ளுவர் சிலையிலிருந்து விவேகானந்தர் பாறைக்கு இப்பாலத்தின் வழியாக நடந்து சென்று பார்வையிட்டார்.

பின்னர், அய்யன் திருவள்ளுவர் திருவுருவச் சிலையின் கீழ் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள திருவள்ளுவர் திருவுருவப் படத்திற்கும், அய்யன் திருவள்ளுவர் திருவுருவச் சிலையின் பாதங்களுக்கும், -தமிழ்நாடு முதலமைச்சர் மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

கன்னியாகுமரியில் அமைந்துள்ள அய்யன் திருவள்ளுவர் சிலை மற்றும் விவேகானந்தர் பாறையை இணைக்கும் கண்ணாடி இழைப் பாலத்தை அமைப்பதற்கு நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறை முகங்கள் துறை சார்பாக 37 கோடி ரூபாய் நிர்வாக அனுமதி பெறப்பட்டு தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் வைப்பு நிதிப் பணியாக தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டது.

இப்பாலக் கட்டுமான வடிவமைப்பு சென்னை இந்திய தொழில்நுட்பக் கழகத்தின் கடல்சார் பொறியியல் பிரிவின் ஒப்புதலையும், கடலோர ஒழுங்கு முறை மண்டல ஆணையத்தின் அனுமதியையும் பெற்றுள்ளது.

இப்பாலமானது 77 மீட்டர் நீளம் மற்றும் 10 மீட்டர் அகலம் கொண்ட Bowstring Arch பாலமாகும். இது நவீன தொழில் நுட்பத்தில் கடல் அரிப்பு, கடல் காற்றின் வேகம் போன்ற காரணிகளைக் கருத்தில் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது. முழுமையாக பொருத்தப்பட்ட எக்கு அலகுகள் தனித்தனியாக பிரிக்கப்பட்டு வர்ணம் பூசப்பட்டு, நெட்வொர்க் ஆர்ச் முழுமையாக பாலத்தில் பொருத்தப்பட்டுள்ளது. இப்பாலத்தில் 2.5 மீட்டர் அகலமுடைய கண்ணாடி அடித்தளம் கொண்ட நடைபாதை அமைக்கப்பட்டுள்ளது. மேலும், நடைபாதை மேல்தள காங்கிரீட், கிரானைட் கற்கள் மற்றும் ஒளிரூட்டும் விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

திருக்குறள் நெறி பரப்பும் தகைமையாளர்கள் முனைவர் ம. சக்கரவர்த்தி, தென்மொழி நற்றேவன், புலவர் அய்யா மோகன், திருக்குறள் சுப்பராயன், தமிழரிமா தா. சம்பத், பாவலர் மேத்தாவாணன், சி. பன்னீர்செல்வம், முனைவர் க. வளனரசு. முனைவர் பேரா. கஸ்தூரி ராஜா, திருக்குறள் தூயர் அ. கோபிசிங், கைலாசம், திருக்குறள் செல்வன், புலவர் செந்தலை ந. கவுதமன், பெரும்புலவர் மு. படிக்கராமு, முனைவர் கலை. செழியன், மு. கவினரசு, முனைவர் மா. பூங்குன்றன், திருக்குறள் க. கோ. பழனி, திரு.கோ. பிச்சை வள்ளிநாயகம், திருக்குறள் புலவர் நாவை. சிவம், சி. சொல்லரசு, இரா. கழராம்பன் ஆகிய 22 தகைமையாளர்களுக்கு -தமிழ்நாடு முதலமைச்சர் தலா 25 ஆயிரம் ரூபாய்க்கான காசோலை மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கிச் சிறப்பித்தார்.

இவ்விழாவில், சட்டப் பேரவைத் தலைவர் மு. அப்பாவு, நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் திரு.கே.என். நேரு, -ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ. பெரியசாமி, வனத்துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர். பாலு, கனிமொழி, ஆ. ராசா உள்ளிட்ட நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், பொதுப்பணித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா. கார்த்திகேயன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே. ராஜாராமன், கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் ஆர். அழகுமீனா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மாலை தந்தி

01.01.2025

## ஜன.5ல் அறிஞர் அண்ணா நெடுந்தூர ஓட்டப் போட்டிகள் தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அறிவிப்பு

தூத்துக்குடி ஜன.1



தூத்துக்குடி மாவட்டப் பிரிவு சார்பில், அன்றாட வாழ்வில் உடற்தகுதியை பேணுவது குறித்த விழிப்புணர்வை பொது மக்களிடையே ஏற்படுத்துவதற்கும், உடற்தகுதி கலாச்சாரத்தை இளைஞர்களிடையே புகுத்துவதற்கும் அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும் மாரத்தான் போட்டிக்கு இணையான அறிஞர் அண்ணா நெடுந்தூர ஓட்டப் போட்டிகள் 05.01.2025 அன்று காலை 6.00 மணி முதல் மாவட்ட விளையாட்டரங்கத்தில் வைத்து நடைபெற உள்ளது.

ஓட்டப் போட்டிகள் 17 வயது முதல் 25 வயதிற்குட்பட்ட ஆண்களுக்கு 8 கி.மீ, பெண்களுக்கு 5 கி.மீ. 25 வயதிற்கு மேற்பட்ட ஆண்களுக்கு 10 கி.மீ, பெண்களுக்கு 5 கி.மீ. எனவும் நடைபெற உள்ளது. போட்டியில் கலந்து கொண்டு முதலிடம் பெறுபவர்களுக்கு ரூ.5000/மும், இரண்டாமிடம் பெறுபவர்களுக்கு ரூ.3000/மும், மூன்றாமிடம் பெறுபவர்களுக்கு ரூ.2000/மும் நான்காமிடம் முதல் பத்தாமிடம் பெறுபவர்களுக்கு ரூ.1000/மும் பரிசுத் தொகை மற்றும் சான்றிதழ் வழங்கப்பட உள்ளது. மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சியர் க.இளம்பகவத் தெரிவித்துள்ளார்.

## சிவகங்கை மாவட்ட மின்வாரியத்தில் வேலை புறக்கணிப்பு போராட்டம்

சிவகங்கை, ஜன.1



உத்திரபிரதேசம் ராஜஸ்தான் மற்றும் சண்டிகரில் மின் வாரியத்தை தனியாருக்கு விடுவதை கண்டித்து தொழிலாளர்கள் தொடர் போராட்டம் நடத்தி வருகின்றனர்

அவர்களுக்கு ஆதரவாக சிவகங்கை மாவட்டத்தில் தமிழ்நாடு மின் வாரிய அனைத்து மேற்பார்வை பொறியாளர் அலுவலகம் முன்பு நேற்று டிச31 மதியம் 12 மணி முதல் 1 மணி வரை வேலை புறக்கணிப்பு போராட்டம் மற்றும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. சிவகங்கை மேற்பார்வை பொறியாளர் அலுவலகம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் TNEBEMPLOYEESFEDERATION சுப்பிரமணியன் சாத்தையா ஆனந்த செல்வம் சிமிஜிஹி சார்பில் உமாநாத் கருணாநிதி ரமேஷ்பாபு மோகனசுந்தரம் TN-PEO கோகுல் வர்மன் அண்ணா தொழிற் சங்கம் சார்பில் ஜெயக்குமார் பொறியாளர் சங்கம் சார்பில் அசோக் குமார் ஆகியோர் கலந்து கொண்டனர் மேலும் தொழிலாளர்கள் பொறியாளர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



வேலூர் மாவட்டம், ஓட்டேரி, முத்துரங்கம் அரசு கலைக்கல்லூரியில், அரசு உதவிபெறும் பள்ளிகளில் 6ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை தமிழ்வழியில் பயின்று உயர்கல்வியில் சேரும் மாணவிகளுக்கும் மாதந்தோறும் ரூ.1,000 வழங்கும் புதுமைப்பெண் திட்டத்தின் விரிவாக்கத்தை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தூத்துக்குடி மாவட்டத்தில் தொடங்கி வைத்த நிகழ்வை தொடர்ந்து வேலூர் மாவட்டத்தில் முத்துரங்கம் அரசினர் கலைக்கல்லூரியில் மாவட்ட ஆட்சியர் சுப்புலெட்சுமி தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் காணொலி காட்சி வாயிலாக நேரலை செய்யப்பட்டது. இந்நிகழ்ச்சியில் வேலூர் சட்டமன்ற உறுப்பினர் கார்த்திகேயன், மாநகராட்சி மேயர்சுஜாதா, மாநகராட்சி துணைமேயர் சுனில்குமார், வேலூர் வருவாய் கோட்டாட்சியர் பாலசுப்பிரமணியன் மற்றும் அரசு துறை சார்ந்த அலுவலர்கள் பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



மதுரை மாநகராட்சி மாட்டுத்தாவணி மலர் அங்காடி வளாகத்தில் காசநோய் இல்லா தமிழகத்தை உருவாக்க ஒன்றிணைவோம் என்ற அடிப்படையில் காசநோயாளிகளுக்கு ஊட்டச்சத்து மற்றும் உணவு பெட்டகங்களை புதுடெல்லி, தேசிய சுகாதார இயக்கம், இயக்குநர் ஆராதனா பட்நாயக், தமிழ்நாடு தேசிய சுகாதார இயக்கம், இயக்குநர் அருண் தம்புராஜ், மேயர் இந்திராணி பொன்வசந்த், மாநகராட்சி ஆணையாளர் ச.தினேஷ் குமார் ஆகியோர் வழங்கினார்கள் அருகில் துணை மேயர் தி.நாகராஜன், மண்டலத் தலைவர் சரவணபுவனேஸ்வரி, மாவட்ட சுகாதார அலுவலர் மரு.குமரகுருபரன், மாநகர் நல அலுவலர் மரு.இந்திரா, உதவி நகர்நல அலுவலர் மரு.அபிஷேக், மாமன்ற உறுப்பினர் மாலதி அவர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்.



அய்யன் திருவள்ளுவரின் 133 அடி உயர திருவுருவச்சிலை முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களால் கன்னியாகுமரியில் நிறுவப்பட்டு, 25 ஆண்டுகள் நிறைவு வெள்ளி விழாவினை முன்னிட்டு, சிவகங்கை மாவட்டத்தில் நடைபெற்ற நிறைவு விழாவில், கவியோகி சுத்தானந்த பாரதி, மாவட்ட மைய நூலகத்தில், பொது நூலகத்துறை இயக்கத்தின் சார்பில் நடத்தப்பட்ட பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவியர்களுக்கு பரிசுகள் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை மாவட்ட வருவாய் அலுவலர் மரு.எஸ்.செல்வசுரபி வழங்கினார். உடன் சிவகங்கை மாவட்ட நூலக அலுவலர் கு.திருஞானசம்பந்தம், சிவகங்கை மாவட்ட மைய நூலகர் சூ.முத்துக்குமார், நூலக கண்காணிப்பாளர் சுவாமிநாதன், வாசகர் வட்ட தலைவர் அன்புதுரை, நூலக நண்பர்கள் திட்ட தன்னார்வலர் குழுவினர் ஈஸ்வரன், முத்து, திரு.கண்ணன், ரமேஷ் கண்ணன், ஆசிரியர் திரு.கண்ணப்பன் உட்பட பலர் உள்ளனர்.

## தொண்டியில் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை மருத்துவமனையாக தரம் உயர்த்தக் கோரி காத்திருப்பு போராட்டம்

திருவாடானை ஜன01



ராமநாதபுரம் மாவட்டம் திருவாடானை அருகே தொண்டி பேரூராட்சியில் கடந்த பல ஆண்டுகளாக மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது.

இந்த ஆரம்ப சுகாதார நிலையத்தில் நீண்ட காலமாக நிரந்தர மருத்துவர்கள் பணியமர்த்தப்படாததால் இப்பகுதியில் நடைபெறும் விபத்து, விஷம் தீண்டுதல், மர்ம காய்ச்சல் மற்றும் மகப்பேறு உள்ளிட்ட அவசர சிகிச்சை காலங்களில் உயிரிழப்புகள் அதிகமாக ஏற்படு வதாகவும், மேலும் இங்கு உள் மற்றும் வெளி நோயாளிகளுக்கு தரமான சிகிச்சை அளிக்கப்படுவதில்லையெனவும் கூறப்படுகிறது.

இந்த நிலையில் அப்பகுதி மக்களின் நீண்ட கால கோரிக்கையான அரசு மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தை, அரசு மருத்துவமனையாக தரம் உயர்த்தக் கோரியும், நிரந்தர மருத்துவர்களை பணியமர்த்தக் கோரியும் தமிழக அரசை வலியுறுத்தி தொண்டி மக்கள் நலப்பணிக் குழு சார்பில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் முன்பு சுமார் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த காத்திருப்பு போராட்டத்தில் ஐக்கிய முஸ்லீம் முன்னேற்ற கழகத்தின் நிறுவனத் தலைவர் ஹைதர் அலி, தமிழக மக்கள் ஜனநாயகக் கட்சியின் நிறுவனத் தலைவர் கே.எம்.சரீப், SDPI மாநில தலைவர் நெல்லை முபாரக் மற்றும் மூத்த பத்திரிக்கையாளர் தமிழா தமிழா பாண்டியன் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டனர். இந்த நிகழ்வில் அதிமுக எம்.ஜி.ஆர்.மன்ற மாநில இணை செயலாளர் கே.சி. ஆணிமுத்து மற்றும் அதிமுக ஒன்றிய கழக செயலாளர்கள் தொண்டி பேரூராட்சி மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த ஏராளமான பொதுமக்கள் மற்றும் பல்வேறு அரசியல் கட்சி பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் திருவாடானை உட்கோட்ட துணைக் காவல் கண்காணிப்பாளர் சீனிவாசன் தலைமையில் சுமார் 50க்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.

## மாட்டுப்பொங்கலை முன்னிட்டு ஜல்லிக்கட்டு போட்டிக்கு தயாராகும் இலங்கை முன்னாள் அமைச்சர் காளைகள் பயிற்சி தீவிரம்

சிவகங்கை ஜன.1



சிவகங்கை மாவட்டம் மதகுபட்டியை அடுத்துள்ளது கீழக்கோட்டை கிராமம். இந்த கிராமத்தை பூர்வீகமாகக் கொண்டவர் செந்தில் தொண்டமான் இவர் இலங்கையில் உள்ள இளைஞர் தொழிலாளர் காங்கிரஸ் கட்சியின் தலைவராக பதவி வகித்து வருகிறார். இவர் ஏற்கனவே இலங்கையில் அமைச்சர், ஆளுநர் உள்ளிட்ட பல்வேறு பதவிகளை வகித்து வந்தார். இவர் நமது தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டான ஜல்லிக்கட்டு காளைகள் வளர்ப்பதில் மிகுந்த ஆர்வம் கொண்டவர். மேலும் தனது சொந்த கிராமமான கீழக்கோட்டையில் உள்ள இவருக்கு சொந்தமான தோப்பில் 20க்கும் மேற்பட்ட காளைகளை வளர்த்து வருகிறார். இந்த காளைகள் அனைத்தும் தமிழகம் முழுவதும் உள்ள ஜல்லிக்கட்டு போட்டிகளில் பங்கேற்பதுடன் பல்வேறு பரிசுகளையும் வாங்கி குவிப்பது வழக்கம். இவரிடம் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னதாக டிவி மீடியாக்கள் மூலம் பிரபலமான கர்நாடக மாநிலத்தில் புலி ஒன்றை விரட்டிய காளை இருப்பதுடன் கே.ஜி.எஃப் படத்தில் வரக்கூடிய அந்த காளையும் உள்ளது. மேலும் பல்வேறு போட்டிகளில் வென்று பரிசுகளை குவித்த புல்லட் காளை என 15க்கும் மேற்பட்ட காளைகள் உள்ளது. இந்த ஆண்டு புதிதாக 6 காளைகள் வாங்கப்பட்டு களம் காணவுள்ளது. தை மாதம் துவங்கி தமிழகம் முழுவதும் குறிப்பாக மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த அலங்காநல்லூர், பாலமேடு, அவனியாபுரம் மற்றும் சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்த சிராவயல், அரளிப்பாறை, சிங்கம்புணரி புதூர், கண்டிப்பட்டி மற்றும் புதுக்கோட்டை மாவட்டம் நார்த்தாமலை, திருச்சி உறையூர் உள்ளிட்ட பல்வேறு ஜல்லிக்கட்டு போட்டிகள் நடைபெற உள்ள நிலையில் அந்தப் போட்டிகளுக்காக இந்த காளைகள் அனைத்திற்கும் வழக்கம் போல் பல்வேறு பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகிறது. குறிப்பாக நீச்சல் பயிற்சி, நடை பயிற்சி, மண் குத்து பயிற்சி ஆகியவை வழங்கப்படுவதுடன் சத்தான ஆகாரங்களும் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் இந்தாண்டு குறிப்பாக விரட்டு மாடு மஞ்சுவிரட்டில் அவிழ்த்து விடப்படும் காளைகளுக்கு மாடுபிடி வீரர்கள் எந்த திசையில் இருந்து வருவார்கள் என்பதை அறிந்துகொண்டு அவர்களை குத்தும் வண்ணம் தமிழகத்திலேயே முதல் முறையாக மாடுபிடி வீரரை போன்ற பொம்மை ஒன்றை வைத்து அதன் மூலம் காளைகளுக்கு குத்து பயிற்சி வழங்கப்படுகிறது. கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்னதாகவே காளைகளை ஜல்லிக்கட்டு போட்டிக்கு அழைத்துச் செல்ல ஏ.சியுடன் கூடிய கேராவேனை அறிமுகப்படுத்திய அமைச்சர் செந்தில் தொண்டமான் இந்த ஆண்டு சிறுபாதைகளில் சென்று கூட காளைகளை எத்திசையிலும் களத்தில் இறக்க சுற்றிலும் ஹைட்ராலிக் உதவியுடன் இயங்கக்கூடிய கதவுகளை கொண்ட மினி வேன்களையும் இதற்காக பிரத்தியேகமாக வடிவமைத்து களத்தில் இறக்கி உள்ளன. மேலும் இதே தோப்பிலேயே இவரது பெயரில் களம் காணும் மாடு பிடி வீரர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இதில் பங்கேற்றுள்ள வீரர்களும் அந்தக் காளைக்கு பயிற்சி அளிப்பவர்களும் இந்த ஆண்டு நடைபெறும் அனைத்து ஜல்லிக்கட்டு போட்டிகளிலும் வழக்கம்போல இந்த காளைகளே பரிசுகளை குவித்து வெற்றி வாகை சூட உள்ளதாக நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

## தென்காசி மாவட்டம் கடையநல்லூர் வட்டம் கருப்பாநதி நீர்த்தேக்கத்திலிருந்து பசலி பிசான பருவ சாகுபடிக்கு தண்ணீர் திறந்து வைப்பு

தென்காசி ஜன.1





தென்காசி மாவட்டம் கடையநல்லூர் வட்டம் கருப்பாநதி நீர்த்தேக்கத்திலிருந்து பசலி பிசான பருவ சாகுபடிக்கு மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல் கிஷோர், நேற்று தண்ணீர் திறந்து வைத்தார்.

கருப்பாநதிபாசன திட்டத்தின் கீழுள்ள பெருங்கால், பாப்பான்கால், சீவலன்கால், இடைகால், கிளாங்காடு, ஊர்மேலழகியான்; ஆகிய கால்வாய்களின் கீழ் உள்ள 9514.70 ஏக்கர் நேரடிப் பாசன மற்றும் மறைமுகப்பாசன நிலங்களுக்கு நடப்பாண்டு பிசான பருவ சாகுபடிக்கு கருப்பாநதி நீர்த்தேக்கத்திலிருந்து 31.12.2024 முதல் 31.03.2025 வரை 91 நாட்களுக்கு நாள் ஒன்றுக்கு வினாடிக்கு 25 கனஅடி வீதம்; நீர் இருப்பை பொறுத்து தண்ணீர் திறந்து விடப்படும்.

இதன் மூலம்; வைரவன்குளம், கிருஷ்ணாபுரம், சொக்கம்பட்டி, குமந்தாபுரம், போகநல்லூர், கடையநல்லூர், இடைகால், கிளாங்காடு, கம்பநேரி கிராமம், பொய்கை, திருமலாபுரம், சேர்ந்தமரம், குலசேகரமங்கலம், வீரசிகாமணி உள்ளிட்ட 14 கிராமங்கள் பயன் பெறும்.

எதிர் வரும் நாட்களில் வடகிழக்கு பருவ மழையினால் மேலும் அணையில் நீர்வரத்து அதிகரிக்கப்படலாமென எதிர் பார்க்கப்படுகிறது. மேலும் நீர்த்தேக்கத்தில் எதிர் வரும் நாட்களில் பருவமழை பொய்த்து எதிர் பார்க்கின்ற நீர்வரத்து கிடைக்கப் பெறவில்லையென்றால், இருக்கும் நீரை அனுமதிக்கப்பட்ட பாசன நிலங்கள் முழுமைக்கும் பயன்பெறும் வகையில் சுழற்சி முறையில் வழங்கப்படும் எனவும், நீரை சிக்கனமாக பயனபடுத்தவும், நீர்விநியோகப் பணியில் நீர்வளத்துறைக்கு ஒத்துழைப்புத் தருமாறும் மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல்கிஷோர், கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்நிகழ்ச்சியில் செயற் பொறியாளர் (நீர்வளம் ஆதாரத் துறை) தனலெட்சுமி, உதவி செயற் பொறியாளர் (நீர்வளம் ஆதாரத்துறை) சுப்பிரமணிய பாண்டியன், உதவிப் பொறியாளர்கள்; (நீர்வளம் ஆதாரத்துறை) சரவணக்குமார், உதயகுமார், அரசு அலுவலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் விவசாய சங்க பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



வேலூர் மாவட்டம், வேலூர் மாநகராட்சிக்குட்பட்ட, வேலூர் புதிய பேருந்து நிலைய வளாகத்தில் செய்தி மக்கள் தொடர்புத் துறை சார்பில் திருவள்ளுவர் சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செய்து வெள்ளி விழா மாவட்ட ஆட்சியர் சுப்புலட்சுமி தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவானது முக்கூடல் சசூழும் குமரி முனையில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களால் 183 அடி உயர அய்யன் திருவள்ளுவர்சிலை நிறுவப்பட்டு 25 ஆண்டுகள் நிறைவையொட்டி தமிழ்நாடு அரசின் சார்பில் வெள்ளி விழா மாவட்ட ஆட்சியர் சுப்புலட்சுமி தலைமையில் நடைபெற்றது. இதில் வேலூர் சட்டமன்ற உறுப்பினர் கார்த்திகேயன், மாநகராட்சி மேயர், துணை மேயர் சுனில்குமார், மண்டல குழு தலைவர் வீனஸ் நரேந்திரன் மற்றும் மக்கள் பிரதிநிதிகள், துறை சார்ந்த அலுவலர்கள் பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

Printed , published by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi,Rajasekaran Street, vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ.8508502161